**தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 293 - இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 02 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 55,000,000 மொத்த ஒதுக்கீட்டில் 53 சதவீதம் மற்றும் 91 சதவீதமான முறையே மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு (1002) நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 3,741,177 தொகை மற்றும் மானியங்கள் மற்றும் பங்களிப்புக்கள் (1505) நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 43,875,969 தொகை தேறிய நிதியேற்பாட்டிலிருந்து சேமிக்கப்பட்டிருந்தன. | செலவினக் கட்டுப்பாடு தொடர்பாக 2023.02.02 இல் வெளியிடப்பட்ட 02/2023 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் மீண்டெழும் செலவினங்களை 6% ஆல் குறைப்பது தொடர்பாக 2023.01.27 இல் வெளியிடப்பட்ட 01/2023 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம், நிதிக் கட்டுப்பாட்டிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக நிதியேற்பாட்டில் இந்த சேமிப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோன்று வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளாமல் அத்தியாவசிய வாகனங்கள் மாத்திரம் திருத்தம் செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளன. | வருடாந்த மதிப்பீடுகளை முடிந்தவரை சரியாகத் தயாரிப்பதற்கும், சம்பந்தப்பட்ட வேலையில் உள்ள நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மென்பொருள் மேம்பாட்டிற்காக செலவின விடய இல. 293-2-1-2106 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000,000 ஒதுக்கீட்டில், ரூபா 2,501,177 இற்கு சமமான 50 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில், திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு மூலம் தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு, பெறப்பட்ட கேள்விகளில், ரூபா 4,353,300/- (வற் இல்லாமல்) தொகைக்கு | உரிய பணிகளில் உள்ள ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கும், அபிவிருத்தி பணிகளை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

தகுதிவாய்ந்த தனியார் கம்பனியிடம் இருந்து சம்பந்தப்பட்ட பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

ஆலோசனை சேவை வழங்குநரின் நியமனம் 2023 ஆகஸ்ட் வரை தாமதமாகியிருந்ததால், சம்பந்தப்பட்ட பணியின் அனைத்து வெளியீடுகளையும் உரிய நிறுவனம் உருவாக்கி பூர்த்தி செய்யத் தவறியதால், அபிவிருத்திக்கு பின்னர் முதலாவது மற்றும் இரண்டாவது வெளியீடுகளுக்கு மாத்திரமே தொடர்புடைய ரூபா 2,498,823/- தொகை செலுத்தப்பட்டுள்ளது.

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| 2022 சனவரி 25 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(ஆ) பந்தி | இவ்வாறான வாகனங்களை திருத்தும் பணி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் துரிதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு சொந்தமான 02 வாகனங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக 02 வருடங்களுக்கு மேலாக எவ்வித திருத்தமும் செய்யாமல் விளைவற்றிருந்தன. | திணைக்களத்திற்குச் சொந்தமான KO-8627 மற்றும் 32-7486 இலக்கமிடப்பட்ட வாகனங்கள், இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளன. | வாகனங்களை பழுதுபார்த்து, இயங்கும் நிலையில் வைக்கும் பணிகளை, விரைவாக பூர்த்தி செய்து, சிறந்த பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் சேதம் ஏற்பட்டதில் இருந்து 04 மற்றும் 09 ஆண்டுகளுக்கு இடையில் கடந்திருந்த 07 வழக்குகள் தொடர்பாக ரூபா 2,086,351 கூட்டுமொத்தமான நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | இந்த சேதங்கள் ஏற்பட்ட 07 சம்பவங்களில் நி.பி. 103 மற்றும் 104 இல் விசாரணை செய்திருக்காத 02 சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இறுதி கட்டத்தில் உள்ளதுடன் 03 சம்பவங்கள் சட்ட ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் ஒரு சம்பவம் தொடர்பாக குற்றவாளி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளதோடு, மற்றைய சம்பவம் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால், வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் செயற்பட வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 66,700,000 பெறுமதியான 75 பேர்ச்சஸ் காணியை 2009 ஆம் ஆண்டில் ரூபா 59,304,347 தொகையை செலுத்தி திணைக்களம் கொள்வனவு செய்திருந்த போதிலும் இந்த காணி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்காததுடன் 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இந்த காணி எந்தவொரு உற்பத்தி நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட காணியை சம்பிரதாயபூர்வமாக சுவீகரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2020 ஆகஸ்டு 28 இல் காணியை கையளிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுத்து 2024 பெப்ரவரி மாதத்தில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் திட்டம் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. நிர்மாணப் பணிகளுக்கு தேவையான நிதியேற்பாடுகளை வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அது திறைசேரியில் இருந்து பெறப்படவில்லை. | 14 ஆண்டுகளுக்கு முன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட இந்த காணிகளை தாமதமின்றி கையகப்படுத்தி, தேவையான நிர்மாண பணிகளை செய்து, சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 3,544 பயிரிடுபவர்களிடமிருந்து ரூபா 126,306,217 தொகை பெறப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும், 15 மாவட்டங்களில் 32,563 விவசாயிகள் இறப்பர் மறு நடவு மற்றும் புதிய பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட பயிர்ச்செய்கை மானியத்துடன் பயிர்ச்செய்கையை கைவிட்டிருந்ததால் திணைக்களம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | இந்த மானியங்களை மீளப்பெறுதல் மற்றும் திரும்பபெறுதல் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சிபாரிசு செய்வதற்கு இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழு அறிக்கையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மானியங்களைப் பெற்ற பின்னர் இறப்பர் பயிர்ச்செய்கை கைவிடப்படுவதற்கு காரணமான காரணிகளை சரிபார்த்து, மீள மானியம் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து, பெற வேண்டிய கொடுப்பனவுகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2010/2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இறப்பர் காணிகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கை 2022 இன் பிரகாரம் இறப்பர் காணியின் எண்ணிக்கை 138,526 ஹெக்டெயர்களாக வழங்கப்பட்ட போதிலும், இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தகவலின் பிரகாரம் இறப்பர் காணிகளின் எண்ணிக்கை 98,583.56 ஹெக்டெயராக குறிப்பிடப்பட்டுள்ளது. | 2010/2011 இல் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் காணிகளின் கணக்கெடுப்பின் போது இறப்பர் காணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இலங்கையில் உள்ள இறப்பர் காணிகளின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டு வரை கணிப்பிடப்பட்டதுடன் அந்த ஆண்டில் புதிய பயிரிடப்பட்ட நிலப்பரப்பைக் கூட்டி நிறுத்தப்பட்ட பயிர்ச்செய்கை நிலப்பரப்பை கழித்து மதிப்பிடப்பட்ட பெறுமதி கணிப்பிடப்படுகிறது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்பில் இறப்பர் காணி கணக்கெடுப்பை நடாத்துவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தேவையான ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதால் அது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இறப்பர் பயிரிடப்பட்ட காணிகளின் எண்ணிக்கை குறித்த சரியான தகவல்களை இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் பேண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இறப்பர் பெருந்தோட்டங்களில் இலை உதிர்வு நோய்க்காக 2023 ஆம் ஆண்டில் முறையே 835 கிலோகிராம் மற்றும் 52 கிலோகிராம் கார்பென்டாசிம் (carbendazim) மற்றும் ஹெக்சகோனசோல் (hexaconazole) பூஞ்சை கொல்லிகள் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், 60 சதவீதத்திற்கும் அதிகமான நிலப்பரப்பில் இந்நோய் பரவியுள்ளதால், நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்த்த முடிவுகளை அடைந்திருக்கவில்லை. இந்த பூஞ்சைக் கொல்லிகளில் முறையே 597 கிலோகிராம் மற்றும் 22.87 கிலோகிராம் 2024 சனவரி 31 வரையிலும் பிராந்திய அலுவலகங்களில் இருந்தன. | விவசாயிகளின் கோரிக்கையின் பேரில் பரிகாரம் அளிக்கப்படும் காணிகள் அனைத்தும் இதுவரை சுத்திகரிப்பு செய்யப்பட்டு, இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பிராந்திய அலுவலகங்களுக்குத் தேவையான அறிவுரைகளை தொடர்ந்து வழங்கி விவசாயிகள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இலை துளி நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த, காலாவதி திகதிக்கு முன்னர் வாங்கிய பூஞ்சை கொல்லிகளை பயன்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 08 முதல் 12 வருடங்களாக ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களில் இருந்து பெறப்பட்ட இந்தத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் 16 மோட்டார் சைக்கிள்கள் மீளாய்வாண்டின் இறுதிக்குள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அப்போதைய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட 03 மோட்டார் வாகனங்களும் 16 மோட்டார் சைக்கிள்களும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அந்த வாகனங்களை திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | இந்த வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை திணைக்களத்திற்கு பெற்றுக் கொண்டு அவற்றை உரிமையாக்கும் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை வெற்றிடங்களின் கீழ் இலங்கை நிர்வாக சேவையில் 05 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கும் கணக்காளர் சேவையில் 01 பதவிகளுக்கும் 2021 ஆம் | இலங்கை நிர்வாக சேவையில் வெற்றிடமாக உள்ள 05 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கும் 01 கணக்காளர் பதவிக்கும் உத்தியோகத்தர்களின் நியமனம் | பதவியணியினர் வெற்றிடங்களின் தேவைப்பாட்டை சரியாக கண்டறிந்து ஆட்சேர்ப்பு |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிலிருந்து உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய அமைச்சுக்கு வெற்றிடங்கள் பற்றி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் செயற்பாட்டிற்கு நேரடியாகப் பங்களிக்கும் 9 சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 61 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேலும் 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களில் அதிகரிக்கும் போக்கு காணப்பட்டது. | இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்படவிருந்தது. எனினும், மேற்படி பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு முதல் அரசாங்க நியமனங்களை கட்டுப்படுத்தியதன் அடிப்படையில் 06 பேர் மாத்திரமே ஆட்சேர்ப்புக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அதற்கிணங்க இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது ஓய்வுபெறுதல் மற்றும் பதவிவிலகல் போன்ற காரணங்களால் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்காததன் விளைவாக அதிகரித்துள்ளது. | பதவியணியினர் வெற்றிடங்களின் தேவைப்பாட்டை சரியாக கண்டறிந்து ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |